சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 19.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 122/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | செல்வராஜ் |
| தந்தை பெயர் | : | சின்னபிள்ளை |
| கிராமம் | : | மணக்கால் அய்யம்பேட்டை |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 72 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1 முதல் 3 எதிரிகள் உடையார் சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். 4ம் எதிரி படையாச்சி சமூகத்தை சேர்ந்தர் ஆவார். நானும், 1ம்

எதிரிகளும் புலவநல்லூரில் உள்ள தெற்குதெருவில் வசித்து வருகிறோம். நான் வசித்து வரும் தெருவில் 1ம் எதிரி வைத்தியநாதன் என்பவருடைய வீட்டிற்கு அருகாமையில் அவரது தம்பி குமார் என்வருக்கு சொந்தமான இடம் இருந்தது. 1ம் எதிரியின் தம்பி குமார் என்பவரிடமிருந்து 2012 ஆம் ஆண்டு கிரயம் வாங்கினேன். 2024 ஆம் ஆண்டு அதில் ஒரு கூரை வீடு கட்டினேன். அதில் எனது மகன் ஆசைதம்பி குடியிருந்தான். ஆசைதம்பிக்கு திருமணமாகி மனைவி மற்றும் குழந்தைகளுடன் அங்கு இருந்து வந்தார். மேற்படி வீடும் எனது வீடும் அருகாமையில் இருந்தால் சாப்பிடுவேன். வீட்டில் தங்கிக்கொள்வேன். கடந்த 21.05.2025 ஆம் தேதி எங்கள் தெருவில் குடியிருக்கும் 1ம் எதிரியின் தம்பி திருஞானம் என்பவர் இடத்தை அளப்பதற்காக சர்வேயர் வந்திருந்தார்கள். அவ்வாறு வைத்து அளக்கும் போது 1ம் எதிரியின் இடம் எனது வீட்டிற்குள் வருவதாக கூறி என்னிடம் பிரச்சனை செய்ய ஆரம்பித்தார்கள். அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார்கள். கடந்த 04.06.2025 ஆம் தேதி மாலை 7.00 மணிளவில் எங்கள் தெருவில் உள்ள கோவிலில் உறவினர்களை என் தம்பி மகன் திருமணத்திற்காக உறவினர்களை அமர்த்திவிட்டு மாலை வாங்க சென்றேன். அப்போது 1ம் எதிரி வைத்தியநாதன், சைக்கிள் ஓட்டி வந்தார் அந்த சைக்கிளின் பின்னார் 2ம் எதிரி வீரமணி அமர்ந்திருந்தார். சரி சரி கிளம்பி விட்டிற்களா திரும்பி வந்து பாரு அந்த இடத்தில் வீடு இருக்காது என்று 1ம் எதிரி சொன்னார். மாலை வாங்க செல்லும் போதே பிள்ளையார் கோவிலில் அமர்ந்திருந்த உறவினர்கள் ஓடினார்கள். அப்போது யாரோ ஒருவர் உங்களது வீடு எரிகிறது என்று சொன்னார்கள். நான் ஓடி போய் பார்த்தேன். அப்போது எனக்கு சொந்தமான வீட்டில் எனது மகன் ஆசைத்தம்பி குடியிருந்து வந்த கூரை வீடு எரிந்து கொண்டிருந்தது. எரிந்து கொண்டிருந்து எனது வீட்டிற்கு அருகாமையில் கம்பி வேளி இருந்தது. அந்த கம்பி அருகே 2ம் எதிரி வீரமணி மற்றும் 3ம் எதிரி மாதவனும் கம்பியை தாண்டி குதித்து ஓடினார்கள். அப்போது அங்கு வந்த எனது உறவினர்களும், பொது மக்களும் அருகாமையில் இருந்த தண்ணீரை எடுத்து வந்து அனைக்கும் முயற்சி செய்தார்கள். 1ம் எதிரி வீட்டில் போய் எட்டி பார்த்தபோது வெளியே கேட்டு சாத்தி இருந்தது. ஆனால் வீடு திறந்து இருந்தது. வீட்டிற்குள் நான்கு நபர்கள் இருந்தார்கள். 1ம் எதிரி வைத்தியநாதன்,

2 ம் எதிரி வீரமணி, 3 ம் எதிரி மாதவன், 4 ம் எதிரி ராஜா (எ) நாகராஜ் ஆகியோர்கள் இருந்தார்கள். இதற்கு இடையில் தீயணைப்பு வண்டி வந்து விட்டது. அன்றைய தினமே அதாவது 04.06.2025 ஆம் தேதியே குடவாசல் காவல் நிலையத்திற்கு சென்று எழுத்துப்பூர்வமான ஒரு புகார் கொடுத்தேன். இந்த புகாரை எனக்கு தெரிந்த ஒரு நபரை வைத்து எழுதினேன். அதில் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் தான். அந்த புகார் அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்யதார்கள். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.19 18:20:12 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.